DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.16/2020 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **மாலா** |
| Huspand Name | : | ரவிச்சந்திரன் |
| Village | : | கணக்கன்குடி |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | கூலி |
| Age | : | 42/2025 |

**(வழக்கின் 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி இறப்பு )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20.03.25

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கணக்கன்குடியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 லோகேஷ்வரன் எனது மகன். சாட்சி ராசு எனது தகப்பனார். சாட்சி பிரபு எனது தம்பி. சாட்சி செந்தில் எனது அண்ணன். வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது மகன் லோகேஷ்வரன் எனது அண்ணன் செந்தில் நடத்தி வரும் சலூன் கடையில் வேலை பார்த்து வருகிறார். எனது அண்ணனுடைய சலூன் கடை திருப்புவனத்தில் பூங்கா நகரில் உள்ளது. கடந்த 23.08.2019 தேதி எனது அண்ணன் செந்தில் இரவு சுமார் 9.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது போன் மூலமாக எனது மகன் காயங்கள் ஏற்பட்டு திருப்புவனம் அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார். நான் உடனே எனது மகனை பார்ப்பதற்காக திருப்புவனம் மருத்துவமனைக்கு சென்றேன். எனது மகனை நான் விசாரித்தபோது அன்றைய தினம் பானிபூரி சாப்பிட்டுவிட்டு தானும் விக்கி என்பவரும் திருப்புவனம் யூனியன் அலுவலகம் அருகே வந்துகொண்டிருந்த போது எதிரி ஹரிகரன் என்பவர்

அருவளால் தன்னை இடது கையில் வெட்டியதாகவும் என்னிடம் சொன்னார். அதன்பிறகு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமைக் குற்றவியல் நடுவர்,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.16/2020 |
| Deposition of Witness for | : | P.W. 5 |
| Name | : | **ராசு** |
| Father's Name | : | முத்து |
| Village | : | திருப்புவனம் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | சலூான் கடை |
| Age | : | 69/2025 |

**(வழக்கின் 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி இறப்பு )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20.03.25

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருப்புவனம் பூங்கா நகரில் சலூான் கடை தொழில் செய்து வருகிறேன். நான் எனது மகன் செந்தில் என்ற வீரக்குமார் என்பவருடைய சலூான் கடையில் வேலை பார்த்து கொண்டிருக்கிறேன். அ.சா.1 லோகேஷ்வரன் எனது பேரன். சாட்சிகள் பிரபு, செந்தில் எனது மகன்கள். அ.சா.4 மாலா எனது மகள். சாட்சி விக்கி என்பவரை தெரியும். வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 23.08.2019 தேதி எம்.ஜி,ஆர் நகரில் உள்ள எனது மகன் செந்திலின் கவின் சலூான் கடையில் வேலை பார்த்து கொண்டிருந்த போது இரவு சுமார் 8.30 மணியளவில் நாங்கள் அனைவரும் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தோம். அதன்பிறகு எனது வீட்டில் இரவு 9.00 மணியளவில் நான் எனது மகன் பிரபு என்பவர் பெரம்பலூாரிலிருந்த வருவதாக தகவல் சொல்லியிருந்ததால் அவரை பார்ப்பதற்காக யூனியன் அலுவலகம் அருகே சென்றிருந்தேன். அப்போது அன்றைய தினம் இரவு 9.30 மணியளவில் அந்த இடத்தில் அய்யோ, அம்மா என்று சத்தம் கேட்டு நான்

பார்த்தபோது சத்தம் போட்டவர் எனது பேரன் லோகேஷ்வரன் என்று தெரிய வந்தது. எனது பேரனை பார்த்தபோது அவருக்கு இடது கையில் காயம் இருந்தது. நான் என் பேரனை விசாரித்தபோது எதிரி ஹரிகரன் வாளால் வெட்டிவிட்டாதாக என்னிடம் சொன்னார். அதன்பிறகு நான் அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு என் பேரனை திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். அதன்பிறகு 108 ஆம்புலன்சு மூலமாக மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.03.20 10:00:41 +0000

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.